# பெண்பாற் புலவர் பாடல்களில் ஆட்கோட்பாட்டுச்சேரலாதன்

3

**முனைவர் பா.பிரியா**
**உதவிப்பேராசியர் & தமிழ்த்துறை**
**ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம் இசைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சிமையம், மதுரை**

**ஆய்வுச்சுருக்கம்**

அமிழ்தினும் இனிய தமிழ்மொழியின் பெருமையினை வெளிப்படுத்தும் ஆவணமாகத் திகழ்வன சங்க இலக்கியங்கள் ஆகும். இவ் இலக்கியங்கள் பழந்தமிழரின் பண்பாட்டுக் கூறுகளைச் செம்மையான முறையில் பதிவுசெய்துள்ளன. சங்க கால மக்களின் வாழ்வானது அகம், புறம் என இருகூறாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அகவாழ்க்கையானது களவு, கற்பு என்ற முறையில் அமைகிறது. புறவாழ்வானது மறமாண்பும், கொடை மாண்பும், புலமைச்செறிவும் ஒருங்கே கூடியவையாகும். பழந்தமிழகமானது சேர,சோழ, பாண்டிய மன்னர்களால் ஆட்சிசெய்யப்பட்டது. அவற்றுள் தொல்குடி மரபில் முதலாவதாக போற்றப்படும் சேர மன்னர்களைப் போற்றிப் பாடிய பெண்பாற் புலவர்களின் பாடல்களில் காணப்படும் ஆழ்ந்த புலமையை நுணுகி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**முதன்மைச்சொற்கள்**

பதிற்றுப்பத்து, ஆட்கோட்பாட்டுச்சேரலாதன், நச்செள்ளையார், சேரமன்னர்கள், காக்கைப்பாடினியார்,

**ஆய்வுநோக்கம்**

சங்ககாலம் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. அக்காலத்தில் வாழ்ந்த மக்களை பழந்தமிழர்கள் என்று அழைக்கிறோம். தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். இம்மன்னர்கள் மக்களால் இறைவனுக்கு நிகராக போற்றப்பட்டனர். முடிவேந்தர்கள் தங்கள் நாட்டின் வளத்தைப் பெருக்கியும் குடிமக்களை துன்பமின்றி பாதுகாத்தும், தம்மைநாடிவரும் இரவலருக்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மை கொண்டவராகவும் திகழ்ந்தனர். அத்தகைய மன்னர்களைப் புலவர்கள் புகழ்ந்து பாடும் திறமைப் பெற்றிருந்தனர். அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் மக்களோடு மக்களாக எளிமையான வாழ்க்கை முறையை மேற்கொண்டனர். சங்ககாலத்தில் கல்விமுறை இருபாலருக்கும் பொதுவானதாக இருந்தது. புலவர்கள் தங்களின் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் கொண்டவர்களாக இருந்தனர். பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினர் என்பதற்கு பெண்பாற் புலவர்கள் சான்றாக அமைகின்றனர். சேரமன்னர்களைப் புகழ்ந்து பாடிய பெண்பாற் புலவர்களின் பாடல்களில் காணப்படும் தமிழ்ப்புலமையை அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சேரமன்னர்கள் – வரலாறு**

சேர மன்னர்கள் மலைப்பகுதிகளில் ஆட்சிசெலுத்தியதால் இவர்கள் சோழ, பாண்டியர்களைக் காட்டிலும் தொன்மையான குடிகளாக கருதப்படுகின்றனர். சேர நாட்டின் எல்லைகளைப் பற்றிக்

குறிப்பிடும்போது, “**சங்கத்தமிழ்ச் சேரநாடு இன்றைய திருவாங்கூர், கொச்சி, மலபார் ஆகியவற்றோடு குடகு, மைசூர், தென்கன்னட நாடுகளையும் உள்ளடக்கியிருந்தமை உணரப்படும்**”[1] என்ற கூற்றிலிருந்து அறிந்துகொள்ளமுடிகின்றது. சேர நாட்டின் பெயர்க்காரணம் குறித்து சாமி சிதம்பரனார், **“சேரல் என்றால் மலை அடுக்கு என்று பொருள் சேர்- சேர்ந்து, பிணை மலை அடுக்குகள் அடுத்தடுத்து பிணைந்து நெருங்கி இருப்பதற்குச் சேரல் என்று பெயர். மேற்கு தொடர்ச்சி மலையானது பல அடுக்குகளைக் கொண்டது. அம்மலையை உட்கொண்டு மலைக்கும் , கடலுக்கும் இடையில் உள்ள நாடு முழுவதும் சேரல்நாடு எனப்படும். அதனால் அந்த நாட்டு அரசர்களுக்குச் சேரலர் என்று பெயர் அமைந்தது.”**[2] என்று விளக்கம் தருகிறார். அத்தகைய மலைவளம் மிக்க நாட்டினை ஆட்சிசெய்த சேரமன்னர்களாக திகழ்ந்தனர். அத்தகைய சிறப்புமிக்க சேரமன்னர்களில் ஒருவராக திகழ்பவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். இம்மன்னன் வீரம், கொடை, போன்றவற்றில் சிறந்து விளங்கினான் என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்**

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கும் வேளாவிக் கோமான் மகளுக்கும் பிறந்தவன் என்பதை,

**“குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு வேளள்**
**ஆவிக் கோமான் றேவி யீன்ற மகன்” (பதிற்.பதி.6.1-2)**

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன. சேர நாட்டிலுள்ள தொண்டியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் சேரலாதன். இம்மன்னன் பகைவரால் திருடிச்செல்லப்பட்ட ஆடுகளை மீட்டுத் தன் நாட்டிற்குக் கொண்டு வந்ததால் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்றழைக்கப்பட்டான். சங்க காலத்தில் மன்னர்கள் கொடைச்சிறப்பில் சிறந்து விளங்கினர். இவனைப் புகழ்ந்து பாடிய பெண் புலவர் நச்செள்ளையாருக்கு வேண்டிய பொன்னும், பொருளும் கொடுத்து, தனது பக்கத்தில் அமரும் பதவியும் கொடுத்து சிறப்பு செய்தான். மேலும், தன்னை எதிர்த்த பகைவர்களை போரில் அழிக்கின்ற வலிமையுடைய சேரனின் கரங்கள் தன்னிடம் இரப்பவர்களுக்கு தாழ்ந்து கொடுக்கும் தன்மையுடையதாக இருந்ததை,

**“வாரா ராயினு மிரவலர் வேண்டித்**
**தேரிற் றந்தவர்க் கார்ப தனல்கும்**
**நகைசால் வாய்மொழி யிசை சாறோன்றல்” (பதிற்.55-10-12)**

என்று நச்செள்ளையார் குறிப்பிடுகிறார். இப்பாடலில் சேரநாட்டில் வறுமையுடையவர்கள் இல்லாத காரணத்தால் இரவலர்கள் மன்னனை நாடி வராமல் இருந்தனர். தன் நாட்டில் இரவலர்கள் யாரும் இல்லை என்பதை அறிந்த மன்னன் பிறநாடுகளுக்குத் தமது தேர்களை அனுப்பி அங்குள்ள இரவலர்களை அழைத்து வந்து பரிசளித்த இன்புற்றான் என்பதையும், சேரலாதன் ஆட்சி செய்த காலத்தில் வறுமை என்பதே இல்லாத அளவிற்கு வளம் நிறைந்ததாக இருந்ததை அறியமுடிகின்றது.

**வீரம்**

ஆடு கோட்பாட்டு சேரலாதன் பல போர்களைக் கண்டவன். பகைவரின் மதில்களை அழிக்கும் வலிமையான படைகளைக் கொண்டிருந்தான். சேரலாதன் வலிமைமிக்க படையினைக் கொண்டதால், பல

போர்களில் வெற்றிக் கண்டான். இம்மன்னன் பகைவரைத் தாக்கி அழிப்பதில் வல்லமைக் கொண்டவன் என்பதை நச்செள்ளையார் குறிப்பிடுகையில்,

**"மாற்றருஞ் சீற்றத்து மாயிருங் கூற்றம்**
**வலைவிரித் தன்ன நோக்கலை**
**கடியையா ளெருந்தகை செருவத் தானே" (பதிற்.51-35-37)**

என்ற பாடலடிகளின் வழியாக அம்மன்னனின் வீரத்தினை எடுத்துரைக்கிறார். அதே சேரலாதன் பகைவர்களைப் போரில் வென்று அவர்நாட்டுச் செல்வங்களைத் தன் நாட்டிற்குக் கொண்டு வந்து பாசறையில் தங்கிச் செயலாற்றிய சிறப்பிற்குரியவன். மேலும், இதைக் கண்ட பகைவர் இவனை வெல்வது அரிது என எண்ணி தம் நாட்டிலுள்ள செல்வங்களை வலிய வந்து கொடுத்துப் பணிந்து நின்றனர் என்பதை,

**"வாடா யாணர் நாடு திறை கொடுப்ப**
**நல்கிணை யாகுமதி" (பதிற்-53-2-3)**

என்று கூறுவதிலிருந்து அம்மன்னனின் வீரத்தினைப் பற்றி அறியமுடிகிறது. மேலும், சேரலாதன் போர்களத்தில் போரிட்டதை பற்றிக் குறிப்பிடுகையில்,

**"அருங்கலந் தரீஇய நீர்மிசை நிவக்கும்**
**பெருங்கலி வங்கற் திசை திரிந்தாங்கு**
**மையணிந் தெழுதரு மாயிரும் பஃறோல்**
**மெய்புதை யரண மெண்ணாதெஃகு சுமந்து**
**முன் சமத்தெழுதரும் வண்கண் ஆடவர்" (பதிற்- 52-2-8)**

என்ற அடிகளில் பொருள்களைக் கொண்டு வருவதற்காக கப்பல்கள் கடலில் மிதந்து செல்வது போல பகைவர்களை அழிப்பதற்கு போர்களத்திற்து இம்மன்னன் தேரில் சென்றான். போர்வீரர்கள் முன்னே வேலினைச் சுமந்துகொண்டு செல்ல, சேரலாதன் பின்னே சென்றான். மேலும் போர்களத்தில் உள்ள வீரர்கள் மரணம் எய்தும் வரை சேரலாதன் போரிட்டான் என்பதை புலவர் இப்பாடலின் வழி வெளிப்படுத்துகிறார். மேற்கண்ட கருத்திலிருந்து சேரலாதன் வீரமிக்கவனாகவும், வலிமை மிக்க படைகளைக் கொண்டவனாகவும் திகழ்ந்துள்ளான் என்பதை அறியமுடிகிறது.

**கல்வி**

சமூகம் பண்பட்ட நிலையை அடைய கல்வி அவசியமாகிறது. வாழ்வில் நன்மை தீமைகளை அறிந்து அனைத்து உயிரினத்தையும் தம்மைப் போல் நேசிக்கும் குணத்தை அளிப்பது கல்வியாகும். அத்தகைய சிறப்புமிக்க கல்வியைச் சேரலாதன் பெற்றிருந்தான். அம்மன்னன் தம் படை வீரர்களுக்குக் கவசம் போன்றவனவாகவும், தன்னை நம்பி அடைக்கலமாய் வந்தவர்க்குப் பாதுகாப்பாகவும் இருந்தான் என்பதை,

**"உலகந் தாங்கிய மேம்படு கற்பின்**
**வில்லோர் மெய்ம்மறை வீற்றிருங் கொற்றத்துச்**
**செல்வர் செல்வ சேர்ந்தோர்க் கரணம்"(பதிற்,59-8-10)**

என்று நச்செள்ளையார் சிறப்பிக்கின்றார். **"இளமையிலேயே பல கலைகளையும் கற்று, பல்வகைப் படைப்பயிற்சியும் பெற்று வேட்டையாடுவதிலும் தேர்ச்சியுற்று, அறிவு, ஆற்றல், அன்பு , அறம் ,மறம்,**

**முதலிய குணங்களை ஒருங்கே உடையவனாய், பல அருஞ்செயலும் அறச்செயலும் ஆற்றிக் குடிகளின் உள்ளத்தைக் கவர்ந்தவனாய் இருத்தல் வேண்டும்”**[3]. மேற்கண்ட பாடலின் வழி இத்தகைய அனைத்து தகுதிகளையும் சேரலாதன் பெற்றிருந்தான் என்பதை அறியமுடிகிறது.

**கடமையுணர்வு**

நாட்டு மக்களின் தேவைகளை அறிந்து செயலாற்றுபவன் சிறந்த மன்னன் ஆவான். மன்னர்கள் தம் கடமையிலிருந்து தவறும் போதும் புலவர்கள் அறிவுரை வழங்கியுள்ளனர் என்பதை,

**“சுடர்நுதல் மட நோக்கில்**
**வாணகை இலங்கு எயிற்று**
**அமிழ்து பொதி துவர் வாய் அசை நடை விறலியர்**
**பாடல் சான்ற நீடினை உறைதலின்**
**வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்ம்” (பதிற்-51.19-23)**

என்ற பாடல் அடியின் வழியாக காக்கைப்பாடினியார் சேரலாதனிடம், விறலியர் பாட்டை விரும்பி சிற்றின்பத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் பகைவர்கள் உன்னை எளிதாக வென்றுவிடுவார்கள் என்று மன்னனின் தவற்றினை தயக்கம் இல்லாமல் சுட்டிக்காட்டும் தன்மையுடையவர்களாக புலவர்கள் திகழ்ந்துள்ளதை அறியமுடிகிறது.

நாட்டின் செல்வங்களைப் போற்றிப் பாதுகாப்பது நாட்டை ஆளும் மன்னர்களின் கடமைகளில் முதன்மையானதாகக் கருதப்பட்டது. பல நாடுகளிலிருந்து பெறப்பட்ட பொருட்களை தம் நாட்டின் மலை, கடல் போன்றவற்றிலிருந்து கிடைத்த பொருட்களையும் கொண்டு அறந்செயல்களை தவறாமல் செய்வதும், வருவாய் மிகுதியாய் தருகின்ற நாட்டினைப் பாதுகாப்பதும் மன்னர்களின் கடமையாகும் என்பதை நச்செள்ளையார்,

**‘ மலையவுங் கடலவும் பண்ணியம் பகுக்கும்**
**ஆறுமுட்டுறாஅ தறம்புரிந் தொழுகும்**
**நாடல் சான்ற துப்பிற் பணைத்தோட்**
**பாடுசா னன்கலந் தரூஉம்**
**நாடுபுறந் தருத னினக்குமார் கடனே” (பதிற்.59.15-19)**

என்ற பாடலடிகளின் வழியாக சேரலாதன் கடமைகளிலும் சிறந்து விளங்கினான் என்பதை எடுத்துரைக்கிறார்.

வேற்று நாடுகளிலிருந்து கடல் வழியாக தன் நாட்டிற்கு கொண்டு வந்த பொருட்களை பண்டகச் சாலையில் சேர்ந்து வைத்ததை,

**“இன்னிசைப் புணரி யிரங் பௌவத்து**
**நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்” (பதிற் – 55-2-3)**

என்ற பாடலடிகளின் வழியாக வேற்று நாடுகளிலிருந்து சேரநாட்டிற்குப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதை அறியமுடிகிறது. சேரலாதன் நாட்டில் வாழும் உழவர்கள் தம் நாட்டின் வளத்தினைப் பெருக்கும் பொருட்டு நிலங்களை பண்படுத்தினர். பின்னர் உழவு மாடுகளைக் கொண்டு ஏர்பூட்டி விதைப்புச் செய்யும் பொழுது, ஏரின் முனைகள் சென்ற இடங்களில் எல்லாம் ஒளிமணிகள் வெளிப்பட்டுத் தோன்றியதை,

**“ நாஞ்சி லாடிய கொழுவழி மருங்கின்**

**அலங்குகதிர்க் திருமணி பெறூஉம்" (பதிற் 58- 17-18)**

என்ற பாடலடிகளின் வழியாக நச்செள்ளையார் சேரலாதன் நாட்டின் வளத்தினைக் குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் பெண்பாற் புலவர்களால் போற்றப்படும் பெருமையுடையவனாகவும், செங்கோலாட்சி செலுத்திய மன்னனாகவும் திகழ்ந்துள்ளான் என்பதை நச்செள்ளையார், காக்கைப்பாடினியார் பாடலின் வழியாக அறியமுடிகிறது. மேலும், சேரலாதனின் பிறப்பு, கல்விச்சிறப்பு, வீரம், கடமையுணர்வு, அவன் ஆட்சி செலுத்திய சேரநாட்டு வளம் ஆகியவை பெண்பாற் புலவர்களினால் சிறப்பிக்கப்பட்டதையும், அப்பாடல்களின் வழி அப்புலவர்களின் தமிழ்ப் புலமையையும் வெளிப்படுகிறது என்பதை இலக்கியங்கள் வழி அறியப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

**ஔவை துரைச்சாமிப் பிள்ளை - பதிற்றுப்பத்து**
**கழகவெளியீடு, சென்னை-01**

**கோவிந்தன்.கா.புலவர் - சங்க கால அரசர் வரிசை**
**கழக வெளியீடு, சென்னை-01**
**முதல் பதிப்பு- ஜனவரி-1955**

**சிதம்பரனார்.சாமி - சேரர் வரலாறு**
**கழக வெளியீடு, சென்னை-01**
**முதற்பதிப்பு- 1954**

**ஞா.தேவநேயன் - பழந்தமிழாட்சி**
**கழக வெளியீடு, சென்னை-01**
**முதற்பதிப்பு- பிப்ரவரி 1952**